1993 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராம. இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மற்றும் நாகை-காயிதே மில்லத் மாவட்டங்கள் இன்றைக்கு உலக அரங்கில் விவசாயத்திற்கு தன்னிகரற்ற மாவட்டங்களாகத் திகழ்ந்து வருகின்றன என்பது உலகம் அறிந்த ஒன்றாகும். அத்தனை நல்ல பிரசித்தி வாய்ந்த இந்த இரண்டு மாவட்டங்களில் இருக்கிற விவசாயிகள் பயன் பெறுகிற வகையில், இந்தக் கல்லூரியை உடனடியாகத் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும் கூட, இந்த மாவட்டங்களிலிருந்து வருகிற மாணவர்களுக்கு இந்தக் கல்லூரிகளில் முன்னுரிமை அளித்து சேர்ப்பதற்குரிய வாய்ப்பை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சி வழங்குமா ? இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் நுழைவுத் தேர்வு தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 297, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

297—

விதவைகளுக்கு உதவித் தொகை அளிப்பதற்கான வயது வரம்பு.

*16530.—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதவைகளுக்கு உதவித்தொகை அளிக்கப்படுவதற்கான வயது வரம்பு 45 வயதுக்கு மேல் என்றிருப்பதை 35-ஆகக் குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) வயது வரம்பு ஏற்கெனவே நீக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டு விட்டது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1993 ஏப்ரல் 8

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவதிலே தாராள மனம் கொண்ட, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே தற்போது உடனடிப்பலன் கிடைக்கிறவகையில் சில இடங்களில் காலம் தாழ்த்தப்படுகிற காரணத்தால், கணவன் இறந்த தேதியை மையமாக வைத்து விண்ணப்பித்த நாட்களுக்குப் பிறகு நீண்ட நாட்கள் வைத்து பைசல் செய்தாலும் கூட கணவன் இறந்த தேதியை மையமாக வைத்து உதவித் தொகை வழங்கப் படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதவைகளினுடைய உதவித் தொகையைக் கேட்டு விண்ணப்பிக்கின்றவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முதலிலே வருவாய்த்துறை அதிகாரிகளிடத்திலே விண்ணப்பித்து, அதற்குப் பின்னால் அது சமூக நலத் துறைக்கு அனுப்பப்பட்டு, அதற்குப் பின்னால் முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோப்பிலே கையெழுத்திட்டால்தான் அந்த உதவித் தொகை வழங்க முடியும் என்று இருந்தது. ஆனால், மாண்புமிகு முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி பொறுப்பேற்றவுடன், விதவைகளின் மீது கருணையும், பரிவும் கொண்டு, விதவைகள் உதவித் தொகைக்கு குறிப்பிட்ட அளவு என்று இல்லாமல், அதற்கு மேலே, 30 ஆயிரம் பேர்களுக்கு எல்லா மாவட்டங்களிலும் வழங்கலாம் என்ற உத்தரவை முதன் முதலாகப் பிறப்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, இதில் காலம் தாழ்த்தி வழங்குவதற்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எப்போது விண்ணப்பித்தாலும், அந்த விண்ணப்பித்த தேதியை கவனத்திலே கொண்டு, அந்த விண்ணப்பித்த தேதியிலிருந்து வழங்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் சமூக நலத்துறை மூலமாக விதவைகள் உதவித் தொகை பெறுபவர்கள் எத்தனை பேர்கள்? மேலும் சமூக நலத்துறையின் மூலம் விதவைகளுக்கு எவ்வித உதவித் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் விதவை உதவித் தொகை பெறுபவர்களுடைய எண்ணிக்கை 1.97 லட்சம் சமூக நலத்துறையின் சார்பாக விதவைகள் மறுமணம் செய்வதற்கு

1993 ஏப்ரல் 8]

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் திட்டத்தின் கீழ் ரூ 5 ஆயிரம் நிதி உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஏழை விதவைகளின் மகள் திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை மாண்பு மிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் 2 ஆயிரமாக உயர்த்தி, இப்போது அந்த நிதியை வழங்கிக் கொண்டு வருகிறோம். விதவைகளின் குழந்தைகளுக்கு பாடநூல்கள், மற்றும் குறிப் பேடுகள் வழங்கப்படுகின்றன. விதவைகளுக்கு இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. சேவை இல்லங் களிலே விதவைகளுக்கு கல்வி வசதி அளிக்கப்படுகிறது. மற்றும் தையல், எம்பிராய்டரி, துணி தைத்தல் போன்ற தொழில்களிலும் சேவை இல்லங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது பல்லாவரம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் விதவைகளுக்கு முன்னுரிமை வழங் கப்படுகிறது. இது தவிர, சமூக நலத்துறை, சத்துணவுத் துறை மற்றும் உடல் ஊனமுற்றோர் துறைகளில், வேலைக்கு விண்ணப் பங்கள் அளித்து இருந்தால், அவைகளில் விதவைகளுக்கு முன் னுரிமை அளிக்கப்பட்டு, அந்த விதவைகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 298, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

பரமத்தி வேலூர் வட்டத்தில் ஆதிதிராவிடர், தாழ்த்தப்பட்டோ ருக்கு காலனி கட்டுவதற்கு நிலப்பட்டா வழங்கல்.

298—

* 10802 திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) சேலம் மாவட்டம், பரமத்திவேலூர் தாலூகாவில் ஆதி திராவிடர், தாழ்த்தப்பட்டோருக்கு காலனி கட்ட பெருங் குறிச்சி, இராமதேவம் போன்ற இடங்களில் நிலம் கையகப்படுத்தி நிலப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) சேலம் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், இராம தேவம் கிராமத்தில் வீட்டுமனைக்காக நிலம் கையகப்படுத்தப் பட்டு விட்டது. இங்கு வீட்டுமனைப் பட்டாக்கள் விரைவில் வழங்கப்படும். பெருங்குறிச்சி கிராமத்திலும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது.